








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஶ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 6 19.02.2026



ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்கிக கேஸரீ|
வேதாந்தாசார்யவர்யோமே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி II

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம் |
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேஸிகம் II

# ஸ்வாமி தேசிகனின் மகத்தான படைப்பு


सिद्धं सत्संप्रदाये स्थिरधियमनघं श्रोत्रियं ब्रह्मनिष्ठं
सत्त्वस्थं सत्यवाचं समयनियतया साधुवृत्त्या समेतम् ।
डम्भासूयादिमुक्तं जितविषयगणं दीर्घबन्धुं दयालुं
स्खालित्ये शासितारं स्वपरहितपरं देशिकं भूष्णुरीप्सेत् ॥

Srimad Rahasyatrayasara goshti




விகாஹே நிக:மாந்தார்ய-விஷ்ணுபாத- ஸமுத்பவாம் |
ரஹஸ்யத்ரயஸாராக்யாம் த்ரிஸ்ரோதஸமகல்மஷாம் ||

அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாதமவிஜாநதாம்।
ரஹஸ்யத்ரயஸாராக்யம் பரம் ப்ரஹ்மாஸ்து மே ஹ்ருதி ॥




ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# பெருமாளின் கல்யாண குணங்கள்

1. ஸத்யம் - நித்யமாய் மாறு படாத தன்மையுள்ளவன் -ரூபத்தில் மாறுதலுள்ளதை ஸ்வரூப மாறுதலென்றும் குணத்தில் மாறு படுவதை ஸ்வாபாவக மாறுதலென்றும் முன்னமேயே பேசப்பட் டது. பகவான் இவ்விருவகை . மாறுதல்களுமில்லாதவன்.

2. ஞானம் - ஸ்வயம் பிரகாச மாயிருக்கை -ஸகலமானவற்றையும் அறியும் தன்மை.

3. அனந்தம் - காலத்தாலோ இடத்தாலோ வஸ்துவாலோ அளவில்லாமல் எப்பொழுதும் எல்லா விடத்திலும், எல்லா வஸ்துவி லும் வியாபித்திருக்கை - ஆதியும் அந்தமுமில்லா தவன் -நித்யன் - அழிவில்லாதவன்.

4. ஆனந்தம் - ஸுகஸ்வரூப மாயிருக்கை-ஸர்வாங்க ஸுந்தர னாய் தோள் கண்டார் தோளே கண்டார் தாள் கண்டார் தாளே கண்டார் எனும் ஸுகுமார னானபடியாய் ஆனந்த ஸ்வரூபனா யிருக்கை. ஆனந்தத்தில் பிரம்மானந் தத்திற்கு மேற்பட்டது வேறில்லை. மனிதர்கள் அடையக்கூடிய ஆனந் தத்தைவிட பலகோடி மடங்கு உயர்ந்ததென சுருதிகள் பேசுகின்றன. தைத்ரீய உபநிஷத் ஆனந்தவல்லி: "யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்யமனஸாஸ ஆனந்தம் பிர்ம்மனோ வித்வாந்| நபிபேதிருதச்சனா" எந்த பிரம்மத்திலிருந்து வாக்குகள் தோடுகூட அடைய முடியாமல் திரும்புகின்றனவோ அந்த பிர்ம் மத்தின் ஆனந்தத்தை அறிந்த பின் எந்தப் பொருளிடமும் பயப் படமாட்டான்.

5. அமலம் - எவ்வித தோஷ முமில்லா திருத்தல். எவ்விதம் சூரி யனிடத்தில் இருள் அண்டாதோ அதேவிதம் பகவானிடத்தில் எவ் வித தோஷமும் சேராது.

சிருஷ்டி, ஸ்திதி (ரக்ஷகம் காத்தல்), ஸம்ஹாரம் (அழித்தல்) ஆகியவற்றிற்கான ஆறு குணங் கள்:

1.ஞானம் - இச்சேதனனுக்குக் கொடுக்க வேண்டிய இஷ்டங் களையோ, தடுக்க வேண்டிய அரிஷ்டங்களையோ அறிவதற்குத் தேவையான எல்லாவற்றையும் எக்காலத்திலும் ஏக காலத்திலும் அறியும் தன்மை.

2. பலம் - அகிலத்தையும் வகிக் கும் திறமை - எல்லாவற்றையும் தாங்கும் சக்தி.

3. வீர்யம் - எவ்வளவு கார் யங்கள் செய்தாலும் களைப்படை யாமலும் என்றும் நீங்காத கத்துடனும் இருத்தல்-ஸகல உல கங்களைப் படைத்தும் காத்தும் எல்லாவற்றையும் ஏவிக்கொண்டு மிருந்தும் சற்றும் சோர்வடையா திருத்தல்.

4. சக்தி - பிறர் முடியாததையும் செய்யக்கூடிய வல் லமை - சேர்த்துக் கொள்ளத்தகாத ஹேய குணமுள்ள சேதனனையும் திருத்தி ஏற்றுக் கொள்ளும் தன்மை.

5. ஐச்வர்யம் - பிறரை ஏவி அடக்கியாளும் தன்மையையும், லீலா விபூதி, நித்ய விபூதி ஆகிய லோகங்களை உடைத்தாயிருந்து அவைகளை ஆளுகையும்.

6. தேஜஸ் - பிறரை ஜயிக் கும் சக்தியும், பிறரால் ஜயிக்க முடியாதிருத்தலும் - மிகுந்த காசமுடைமை. ப்ர

இந்த ஆறு உயர்ந்த குணங் களும் உள்ளவன் என்பதால் அறு குணத்தான் எனத் தென் மொழியிலும் ஷாட்குண்ய பரிபூர்ணன் என வடமொழியிலும் பேசப்படுகிறான்.

## இதர கல்யாண குணங்கள்

1. ஸௌலப்யம்-அடைய விரும்பும் தன்னை பக்தர்கள் தன்னை ஸுலபமாக அடையும் பக்தர் படி இருத்தல். கண்ணுக்குப் புலப் படாதிருக்கக் கூடியதாம். கள் தன்னைக் கண்ணால் கண்டு ஆச்ரயிக்கலாம்படி இருத்தல்.

2. ஸௌசீல்யம் - தான் உயர்ந்த பதவியிலிருந்தும் மிகத் தாழ்ந்த வர்களோடும் மிகுந்த அன்புடன் சமமாய்ப் பழகுதல் - வேடுவ னாகிய குகனுடனும், மர்க்கடங் ஸுக்ரீவாதி களாகிய அனும களுடனும், அரக்கனாகிய விபீஷ ணனுடனும், கோபியர்களுடனும் பழகியதை ஆழ்வார்கள் எடுத் துக் காட்டுகின்றனர். (கலியனின் 5-ம் பத்து 8-ம் திருமொழி).

3. வாத்ஸல்யம்-எப்படிப் பசு வானது தன் கன்றினிடத்திலுள்ள தோஷத்தைப் பாராமல் அபிமான மிகுதியால் நாவினால் நக்கியும் அதற்கு ஏதாவது சிறிது ஆபத்து வரும்போல் தோன்றினாலும் எதிரி யைக் கொம்பும் குளம்பும் கொண்டு தாக்கி அதைக் காப் பாற்ற முற்படுமோ அதேபோன்று சேதனிடத்திலுள்ள தோஷத்தை யும் குணமாகக் கொண்டு அவனை ஏற்று உய்விக்கும் தன்மை.

4. ஸ்வாமித்வம்-ஸர்வத்திற்கும் சேஷியாயிருத்தல்- அதாவது ஸகல சேதனா சேதனங்களையும் தன்னு டைய சொத்தாக வைத்திருத்தல்

5. காருண்யம்- தயை- தன் பிர யோஜனத்தைக் கருதாமல் பிறகு டைய (ஆச்ரிதருடைய) துக்கத் தைப் போக்க விரும்புதல். அபராதி களையும் மன்னித்துச் சேர்த்துக் கொள்ளும் தன்மை.

6. சௌர்யம்-பராக்ரமம்-ஆச் ரிதவிரோதிகளை அழிக்கும் வல்லமை.

7. க்ஷமை பொறுமை - அபராதி களை மன்னித்து உஜ்ஜீவிக்கும்படி செய்யும் தன்மை. ராமாவதாரத் தில் பரமாபராதியான காகா ஸுரனை ரக்ஷித்தது போன்றது.

8. ஸர்வக்ஞத்வம் - எல்லாமறிந் தவனாயிருக்கை.

9. ஸத்யஸங்கல்பத்வம் - அவன் செய்ய நினைத்ததை அவனாலும் விட முடியாதிருத்தல்-சாம சுலோ சுத்தில் கூறியபடி எத்தகைய பாபி யாயிருந்தாலும் ப்ரபத்தி பண்ணி னவர்களை அவர்கள் ஸஞ்சித கர் மங்களைப் போக்கி தன் பக்கம் சேர்த்துக் கொள்ளுதல்.

10. சரணாகதவத்ஸத்வம்-மேலே கூறியதே -தன்னைச் சரணமடைந் தவனைக் கைவிடாதிருத்தல். கஜேந் இர ரக்ஷணமும். த்ரௌபதிக் குப் புடவை சுரந்ததும் அடை யாளங்கள்.

11. பரம உதாரத்வம் - சரண மடைபவனின் ப்ரபத்தியின் சிறுமை யையும் தாம் கொடுக்கும் பலனின் பெருமையையும் பாராது அதிகம் கொடுக்கவில்லையே என்று வருந் தும் தன்மை.

12. க்ருதக்ஞத்வம்-ஒரு சிறிய நல்ல கார்யம் செய்தால்கூட அதை மறக்காமல் மிகவும் பெரி தாகக் கருதி சேதனுக்கு வேண் டிய நன்மைகளைச் செய்தல்.

13. பரிபூர்ணத்வம் நிறைந்திருப்பது.

14. அகிலஹேய ப்ரத்யநீகத் வம்- சேதனா சேதனங்களுக்கு உள்ள திரிவித தோஷங்களும் சேராது விடுபட்டவன். (அசேதனத் தின் பரிமாணங்கள்- பத்த சேத னின் துக்க ஸாகரங்கள் சேதனர் களின் பாரதந்தரியம்.)

15. ஸ்வதந்த்ரத்வம் கும் கட்டுப்பட்டவனல்ல.

16. மார்த்தவம் - தன்னுடைய விச்லேஷத்தைப் பொறுக்கமாட் டாத ஆச்ரிதர்கள் விரஹத்தைப் பொறுக்காத தன்மை.

ஈச்வரன் தனது பலவித கல்யாண குணங்களின் காரணமாக தனது ஆச்ரிதர் பக்கலில் எப்படி ஓர் காமுகனானவன் தன் காதலி யின் அழுக்கையும் உகப்பதுபோல ஆச்ரதனின் தோஷத்தையும் உகப் பவன் எனப் பெரியோர்கள் கூறுவர்.